# திருவருட்பயனில் முப்பொருள் உவமை

**முனைவர் நா. சிவகுரு**

**உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை**

**திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர். 632 115**

**மின்னஞ்சல் : arasi162010@gmail.com**

70

**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கியங்கள் மனிதனைப் பண்படுத்துவன. பக்தி இலக்கியங்கள் மனிதனை செலுமைப்படுத்துவன. சைவ இலக்கியங்களை மனித மகத்துவத்தை எடுத்துக் கூறும் இயல்பினை உடையன. பன்னிருதிருமுறைகள் தோத்திரப்பாடல்கள் என்று அழைக்கப்படுகின்றன. அதுபோன்று சாத்திரங்கள் என்று பதிநான்கு நூலகள்.இவைகளுள் உமாபதி சிவம் எட்டுநூல்களை இயற்றி உள்ளார். அதில் ஒன்று திருவருட்பயன். இதில் சைவ சமயம் குறிப்பிடும் முப்பொருள்களான பதி , பசு, பாசம் குறித்த குறிப்புகள் உவமையின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. பதி – இறைவன், பசு - உயிர்கள், பாசம் – மலங்கள் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. முப்பொருள்களான இவற்றைப்பற்றி இவற்றை விளக்க ஆசிரியர் எவ்வகை உவமைகளைப் பயன்படுத்தி உள்ளார் என்பதை விளக்குவதே இக்கட்டுரை. பதி தானே அனைத்தையும் அறியக்கூடியவன். உயிர்கள் அறிவிக்க அறிவன. பாசம் அறிவித்தாலும் அறியாதது. இவற்றை விளக்க உவமைகள் பயன் பட்டுள்ளன. அவற்றை விளக்கும் முகமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

முன்னுரை

பக்தி இலக்கியங்கள் மனித மனத்தை செலுமைப்படுத்துவன. மனித வாழ்வின் உண்மைத் தன்மையை உணர்ந்துகொள்ள இவை உதவுகின்றன. பன்னிருதிருமுறைகள் தோத்திரப்பாடல்களாக அமைந்துள்ளன. இதன் அடுத்தகட்டமாக சாத்திர நூல்கள் அமைந்துள்ளன. சாத்திர நூல்கள் பதினான்கு ஆகும். இவைகள் மெய்கண்டசாத்திரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவற்றுள் உமாபதி சிவம் எட்டுநூல்களை இயற்றி உள்ளார். இவர் இயற்றிய எட்டு நூல்கள் சித்தாந்த அட்டகம் என்று அழைக்கப்படுகின்றன. அவற்றுள் ஒன்று திருவருட்பயன் என்னும் நூல் ஆகும். இந்நூல் திருக்குறள் அமைப்பில் குறள் வெண்பா அமைப்பில் பத்து அதிகாரங்களாக அமைந்திருக்கும். ஒவ்வொரு அதிகாரத்திற்கும் பத்துப் பாடல்கள் என்ற அடிப்படையில் மொத்தம் நூறு பாடல்களைக் கொண்டு அமைந்து இருக்கும். இந்நூறு பாடல்களில் இறைவன் , உயிர்கள், உயிர்களைப்பிடித்துள்ள மலங்கள் இவற்றின் தன்மைகளைப்பற்றி உவமைகளின் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார் ஆசிரியர் உமாபதிசிவம். சைவசமயம் முப்பொருள் உண்மை என்று குறிப்பிடும். அவை , பதி, பசு, பாசம் என்பனவாகும். இப்முப்பொருள் பற்றி அமைந்துள்ள உவமைகளைப்பற்றி எடுத்துக்கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சைவ சமயம் குறிப்பிடும் முப்பொருள்**

சைவ சமயம் முப்பொருள் கொள்கையை உடையது. முப்பொருள் என்பது இறைவன் , உயிர்கள்,மலங்கள் என்பன. இதனை பதி – இறைவன், பசு – உயிர்கள், பாசம் – மலங்கள்(ஆணவம்,கன்மம்,மாயை) என்று வகைப்படுத்துவர். பதியாகிய இறைவன் சத்துப்பொருள் என்றும் பிற அசத்துப்பொருள் என்றும் அழைக்கப்படுகின்றன. இறைவன் தானே அனைத்தையும் ஒருங்கே அறியும்

தன்மை உடையவன் , உயிர்கள் உணர்த்த உணரும் இயல்புடையன. செம்பினில் களிம்பு போல் இம்மலங்கள் உயிர்களோடு கலந்து இருக்கும். பிற மலங்கள் மறைந்தாலும் ஆணவ மலம் மட்டும் முற்றிலும் நீங்காது அதன் வாசனை உயிர்களோடு கலந்து இருக்கும். இவ்வாறு சைவ சமயம் குறிப்பிடும் முப்பொருள்களைப்பற்றி எளிதில் விளங்கிக்கொள்ள ஆசிரியர் எளிய உவமைகளைக்கையாண்டுள்ளார். அவ் உவமைகளை , பதிபற்றிய உவமைகள் , பசு பற்றிய உவமைகள் , பாசம் பற்றிய உவமைகள் என்று பிரித்துக்காட்டி இக்கட்டுரை விளக்குகின்றது.

**உவமை – விளக்கம்**

உவமையினைப்பற்றித் தொல்காப்பியர் தனி இயல் ஒன்றை அமைத்துள்ளார். இதன் மூலம் இலக்கியத்தில் உவமை அதிகம் இடம் பெற்றவித்தை அறியலாம். இதற்கு உரை எழுதிய உரையாசிரியர் "இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின் உவமையியல் என்னும் பெயர்த்தது. ஒருபுடை ஒப்புமை பற்றி யுவமை உணர்த்தினமையாற் பெற்ற பெயர் மெய்ப்பாடு பற்றித் தோன்றி வழங்குவது. இதனாற் பயன் என்னை மதிப்பதோவெனின் புலன் அல்லாதன புலனாதலும் அலங்காரமாகிக் கேட்டார்க்கின்பம் பயத்தலும், "ஆ"ப்போலும் "ஆமா" எனவுணர்த்திய வழி அதனைக் காட்டகத்துக் கண்டான் முன் கேட்ட ஒப்புமை பற்றி இஃது "ஆமா" வென்று அறியும் "[1] என்று விளக்கம் தருவார். தொல்காப்பியர் உவமைத் தோன்றும்

இடங்களாக வினை, பயன், மெய், உரு என்ற நான்கிகைக் குறிப்பிடுவார்.

இதனை

"வினைபயன் மெய் உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமைத் தோற்றம்" [2]

என்பதால் அறியலாம். உவமைத் தோன்றி விதம் குறித்து அ.ச.ஞானசம்பந்தன் ,"காணப்பட்டப் பொருள்களை ஒப்பிட்டுப் பார்க்கும் இயல்பு மனிதனிடம் இயற்கையாக அமைந்துள்ள பண்பு ஆகும். மனிதனிடம் என்று எண்ணம் தோன்றிற்றோ அன்றே மொழியுந் தோன்றி இருத்தல் வேண்டும். மொழி தோன்றி அன்றே உவமையும் தோன்றி இருத்தல் அவசியம்" [3] உவமையைப்பற்றி விளக்குவார்.

**பதிபற்றிய உவமை**

சைவ சித்தாந்தத் தில் இறைவன் பதி என்று அழைக்கப்படுவான். உமாபதியார் இறைவனைப் பற்றியும் அவனது தன்மையினைப் பற்றியும் கூறும் பொழுது அகர உயிர் என்றும் சுடுநீரில் இருக்கும் வெப்பம் என்றும் குறிப்பிடுவார். இறைவன் உலக உயிர்கள் அமைத்திலும் ஒன்றாயும் அவற்றில் இருந்து வேறாயும் அவற்றுடன் உடனாயும் இருக்கின்றான். இறைவனின் இத்தன்மையினை மெய்கண்டார் தமது நூலான சிவஞான போதத்தில் "அவையே தானேயாய் இருவினையின்
போக்குவரவு புரிய ஆணையின்
நீக்கமின்றி நிற்கும் அன்றே" [4]

என்று குறிப்பிடுவார்.

இறைவன் உயிர்களுடன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நின்று உயிர்களைக் காக்கின்றான் என்று இறைவனின் அத்துவைதப் பண்பை வெளிபடுத்துகின்றார் மெய்கண்டார்.

இதனை ஒன்றாதல் – அவையேயாதல்

வேறாதல் – தானேயாய்

உடனாதல் - அவையே தானேயாய்

என்று பிரித்துக் கொள்ளலாம்.

**அகர உயிராகிய இறை**

எழுத்துக்களுக்கு முதலாக அமைவது அகரம். அது போன்று உயிர்களின் இயக்கத்திற்கு முதன்மையாக அமைவது இறைவன். இறைவனின் இத்தன்மையைக்குறிக்க அகரத்தை உவமையாக ஆசிரியர் பயன் படுத்துகின்றார். எழுத்துக்களின் பிறப்பிற்கு அகரம் முக்கியமானது. எல்லா எழுத்துக்களுடனும் அகரம் மறைந்து இருக்கும். அது போல் எல்லா உயிர்களுடனும் இறைவன் கலந்துள்ளான். இதனை

"அகர உயிர் போல் அறிவாகி எங்கும்

நிகரில்இறை நிற்கும் நிறைந்து"5

என்று உமாபதி சிவம் குறிப்பிடுகின்றார்.

உயிர் எழுத்து மெய் எழுத்து இரண்டிலும் அகரம் கலந்துள்ளது. அது போல் உலகப் பொருள்கள் அனைத்திலும் இறைவன் இரண்டறக்கலந்துள்ளான். இறைவனின் கலப்பினைக்குறிப்பதற்கு அகர உயிர் என்ற உவமையை உமாபதிசிவம் பயன்படுத்திஉள்ளார்.

**தானே தனியானவன்**

இறைவன் உலகப்பொருள்கள் அனைத்திலும் கலந்துள்ளான். ஆனால் அவற்றில் இருந்து வேறுபட்டு தனித்து நிற்பவன். இதனை விளக்க சுடு நீரில் இருக்கும் வெப்பத்தினை உவமையாக உமாபதிசிவம் காட்டுகின்றார். இறைவன் சுடுநீரில் கலந்துள்ள வெப்பம் போல் கலந்து நின்றாலும் நீரும் வெப்பமும் போன்று தனித்து நிற்பவன் இதனை, எங்கும் எவையும் எரியுறு நீர் போல்ஏகம்

தங்குமவன் தானே தனி6

என்பதால் உணரலாம்

இதில் எரியுறு நீர் என்றது நெருப்பில் உள்ள சூடு போலக் கலந்து உடனாய் நிற்கும் தன்மையைக் குறிக்கச் சொல்லப்பட்டது. அவன் உடன் இருந்தாலும் தனியானவன். இதில் உவமையைப் பொருளுடன் பொருந்தினால் இறைவன் உலகுடனும் உயிருடனும் ஒன்றாய் கலந்து நின்றாலும் அவற்றில் இருந்து வேறாய் விளங்குபவன் என்பது புலனாகின்றது. இதனை விளக்க உமாபதிசிவம் எரியுறு நீர் என்ற உவமையைப்பயன்படுத்தி உள்ளார். சுடுநீரில் இருக்கும் வெப்பமானது அந்நீருடன் ஒன்றாயும் அதிலிருந்து வேறாயும் உள்ளது போன்று இறைவன் உயிர்களுடன் ஒன்றாயும் வேறாயும் நிற்கின்றான்.

**பசு பற்றிய உவமை**

சைவசித்தாந்தம் உலக உயிர்களை பசு என்று குறிப்பிடும். உயிர்களின் எண்ணிக்கையை அறிந்து கொள்ள முடியாது. உயிர்களின் பிறப்பினை மாணிக்கவாசகர்

புல்லாகிப் புடாய்ப் புழுவாய் மரமாகிப்

பல்மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய் 7

என்று குறிப்பிடுகின்றார். இதில் உமாபதிசிவம் உயிர்கள் பல பிறவிகள் எடுக்கும் என்பதனை உலகில் வந்து சென்ற நாட்களையும் இனி வர இருக்கின்ற நாட்களையும் அறுதியிட்டுக் கூறமுடியாது அதுபோல உயிர்கள் இன்னும் எத்தனைப்பிறவி எடுத்து இவ்வுலக வாழ்வில் துன்ப ப்படும் என்று உறுதியாகக் கூறமுடியாது. அதுபோன்று இறந்தவர்களின் எண்ணிக்கையையும் நாம் அறுதியிட்டுக் கூறமுடியாது.

இதனை

பிறந்த நாள்மேலும் பிறக்கும் நாள்போலும்

துறந்தோர் துறப்போர் தொகை8

என்பதால் உணரலாம். இதன்மூலம் உயிர்கள் எண்ணில் அடங்காதன என்பதும் அதில் முத்திபெற்றவர்களின் எண்ணிக்கையும் இனிப் பெற இருப்பவர்களின் எண்ணிக்கையையும் அறுதியிட்டுக் கூறமுடியாது என்பதை இவ்வுவமை மூலம் உமாபதி சிவம் உணர்த்துகின்றார்.

**ஆணவத்தின் வெளிப்பாடு**

சைவசித்தாந்தம் உயிர்களுக்கு ஆவண மலம் என்றும் உடன் கலந்து இருக்கும் என்று குறிப்பிடுகின்றது. உயிர்கள் ஆணவத்தில் அழுந்தி தான் என்ன செய்கின்றோம் என்பதை அறியாமல் வாழ்ந்து கொண்டு இருக்கின்றன. பாற்கடலுள் உள்ள மீன்கள் பாலினை உணவாக உண்ண வேண்டும். ஆனால் அதனை உண்ணாது அங்குள்ள சிற்றுயிர்களை உணவாக உண்ணுகின்றன. பாலினது சிறப்பினை மீன்கள் உணராது சிறப்பில்லாத சிற்றுயிர்களை உண்ணுகின்றன. உயிர்கள் திருவருளின் சிறப்பினை உணராது உலகப்பொருட்களை உயர்வாக எண்ணுவதை இச்செயல் காட்டுகின்றது. இதனை ,

பால்ஆழி மீன்ஆளும் பான்மைத்துஅருள் உயிர்கள்

மால்ஆழி ஆழும் மறித்து9

என்று கூறுவதால் அறியலாம்

இறைவனின் திருவருள் உலகம் போன்று துன்பம் உடையது அல்ல. அது எல்லையில்லா இன்பம் உடையது. ஆனால் உயிர்கள் அதனை உணராது இவ்வுலகப்பொருள்கள் மீது அதிக நாட்டம் கொண்டு அதில் அழுந்தி நின்று மறைகின்றன என்பதை விளக்க இவ்வுவமையை உமாபதிசிவம் பயன்படுத்தி உள்ளார்.

**துணைஅறியா உயிர்கள்**

உயிர்கள் தங்களின் உடன் வருகின்ற துணையை அறியாது உள்ளன. இறைவனின் திருவருள் நமக்குத்துணையாக வருவதை உணராது உள்ளன. தனிவழியில் செல்லும் வழிப்போக்கன் எவ்விதம் அச்சம் கொள்வனோ அது போன்று அச்சத்துடன் உயிர்கள் செல்லுகின்றன. தனக்குத் துணையாக வருகின்ற இறைவனின் திருவருளை உணராது உள்ளன. இதனை ,

அணுகுதுணை அறியா ஆற்றோனில் ஐந்தில்

உணர்வை உணரா உயிர்10

என்பதால் உணராலம்

இதனை “ஐம்பொறிகள் சடம் ஆகையால் அவை தம்மோடு ஒன்றுபட்டுள்ள உயிரை அறியாததில் வியப்பேதும் இல்லை. சித்தாகிய உயிர் ஆணவ மலத்தின் வயப்பட்டு இருக்கும். ஆணவமலம் உயிரைப் புறவுணர்வு உடையதாகச் செய்கிறது , அதாவது புறவுலகையே நோக்குமாறு செய்து உலகப்பொருள்கள் மீது ஆசையை உண்டாக்குகிறது. அதே நேரத்தில் உயிர் உள்முகமாக நோக்கித் தன்னை உணரவிடாத படியும் செய்கின்றது என்பார் ஆ. ஆனந்தராசன்.

உயிர்கள் உள்முகமாக நோக்கும் பொழுது தன்னுடன் தனக்குத்துணையாக உள்ள திருவருளை உணரும். ஆனால் அதனை உணராது உயிர் உள்ளது என்பதை உணர்த்த அணுகு துணையறியா என்ற உவமையை உமாபதிசிவம் பயன்படுத்தி உள்ளார்.

**பாசம் பற்றி உவமை**

முப்பொருள்களில் ஒன்று பாசம். இதனை கட்டு , மலம், தளை, என்று குறிப்பிடுவர் சைவசித்தாந்திகள். ஆணவம் ,கன்மம், மாயை இம் மூன்றும் பாசம் என்று அழைக்கப்படும். இதில் ஆணவம் இயற்கை மலம் என்றும் கன்மம் மாயை இரண்டும் செயற்கை மலம் என்றும் அழைக்கப்படும். ஆணவமலம் இருள் என்று குறிப்பிடப்படும்.

உயிர்கள் அனைத்தும் மாயையில் இருந்து தோன்றும். மாயையிலிருந்து தோன்றும் உடம்பு முதலியவை வினைக்கு ஏற்ப உயிர்களைச் சேர்கின்றன. ஆணவமாகிய இருள் நீங்கும் வரை உயிர்களுக்கு மாயை விளக்கு போல் உதவுகின்றது.

இதனை ,

"விடிவாமளவும் விளக்கனைய மாயை

வடிவாதிகன்மத்து வந்து 11

என்பார் உமாபதிசிவம்

இருள் முழுவதும் நீங்க வேண்டுமாயின் சூரிய ஒளி தேவை சூரிய ஒளி தேவை. சூரிய ஒளி வரும் வரை விளக்கு சிறிதளவு உறுதுணையாக இருக்கும். இதனைத்திருவருள் வரும் வரை மாயையானது உயிர்க்குச் சிறிதளவு உறுதுணையாக இருக்கும் என்ற கருத்திற்கு உவமை வழியாக ஆசிரியர் விளக்குகின்றார்.

**முடிவுரை**

- சைவ சித்தாந்தம் முப்பொருள் உண்மை குறித்து எடுத்துக்காட்டுகின்றது. அம்முப்பொருள் உண்மையை எளிய உவமை மூலம் உமாபதிசிவம் எடுத்துக்காட்டுகின்றார்.
- பதி பற்றி உவமை கூறும் பொழுது அகர உயிர் என்றும் எரியுறுநீர் என்றும் எடுத்துக்காட்டுகினறார் உமாபதிசிவம். எழுத்துக்களின் முதன்மையானது அகரம் அது போன்று இறைவன் அனைத்திற்கும் முதன்மையானவன் அனைத்துப்பொருள்களிலும் கலந்துள்ளான். ஆனாலும் அவன் தனியானவன். எரியுறு நீரில் உள்ள வெப்பம் வேறு நீர் வேறு என்ற நிலையில் அவன் தனியாக உள்ளான் என்று உவமைமூலம் வெளிப்படுத்துகின்றார்
- பசு பற்றிய உவமையில் உயிர்களின் நிலை குறித்து உவமைகூறுகின்றார். உயிர் தன் உடன் வருகின்ற இறைவனை அறியாது இருக்கின்றன என்றும் பாற்கடலில் உள்ள மீன்கள் பாலினை உண்ணாது அதிலிருக்கும் தேவையில்லாதவற்றை உண்ணுவது போன்று இறைவனுடன் உள்ளபோதும் அவனை அனுபவிக்காது வேண்டாது உலகப்பொருள்கள மீது பற்றுதல் வைத்துள்ளன என உவமைமூலம் விளக்குகின்றார்.
- பாசம் பற்றி எடுத்துக்கூறும் பொழுது இருள் என்று குறிப்பிடுகின்றார். இருளில் மூழ்கி உள்ள உயிர்கள் அதில் இருந்து வெளிவந்தால் தான் தெளிவடையும். அத்தெளிவைத் தருவது சூரியன். இறைவன் சூரியன் போல் தெளிவைத்தருபவன் அவனை அறியவிடாது மலங்கள் உயிர்களைப் பற்றி உள்ளன என்று உவமையின் மூலம் எடுத்துக் காட்டுகின்றார்.

**அடிக்குறிப்புகள்**

1. தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம். விளக்கம் ப 375
2. தொல்காப்பியம் பொருளதிகாரம் நூற் 1
3. அ.ச.ஞானசம்பந்தன் இலக்கியக்கலை ப 180
4. மெய்கண்டார் சிவஞானபோதம் நூற். 2
5. திருவருட்பயன் பா 1

6. மேலது பா.8
7. மாணிக்கவாசகர் திருவாசகம் சிவபுராணம் வரி.
8. திருவருட்பயன் பா. 11
9. மேலது பா. 34
10. மேலது பா. 35
11. மேலது பா.30